**சார்பு நீதிமன்றம், போளூர்**

**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, போளூர்,**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03–ஆம் நாள் திங்கட்கிழமை

**I.A.No.5/2025 in O.S.No:187/2022**

சின்னக்கண்ணி அம்மாள் ...மனுதாரர்/வாதி

//எதிர்//

1. மனோகரன்
2. சேகர்
3. ராமசந்திரன் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 27.10.2025 –ம் தேதியன்று முடிவாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.M.சம்பத்ராஜன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.K.சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்.

**ஆணையுரை**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை ஏற்று குறியீடு செய்யுமாறு மனுதாரரால் கட்டளை 7 விதி 14 (2) கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர் ஆணையுறுதி வாக்குமூலத்தின் சுருக்கம்: –**

மனுதாரர் அசல் வழக்கை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக உரிமை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனு சொத்து சம்மந்தமான 'அ' பதிவேடு சான்றிட்ட நகல் தற்போது ஜமுனாமரத்தூர் வட்டாச்சியர் அலுவலகத்தில் இருந்து பெற்று தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் தனது வழக்கை நிரூபணம் செய்ய முக்கியமும் அவசியமானதாகும். அதனால் மேற்படி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்று குறியீடு செய்ய வேண்டி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

2. **3 ம்எதிர்மனுதாரர்/ 3 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

இந்த மனுவில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளையும் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்தபோதே மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் அசல் வழக்கில் விசாரணைக்காக

வாய்தா ஏற்பட்ட நிலையில் வழக்கினை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்ககூடியதல்ல. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14 (2) கீழான இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? என்பதே ஆகும்.

4. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஏதுவும் அளிக்கப்படவில்லை.

5. மேற்கண்ட இருதரப்பு வாதுரைகளையும், மனு ஆவணங்களையும், பரிசீலனை செய்ததில், மனுதாரர் மனு சொத்து சம்மந்தமான 'அ' பதிவேடு சான்றிட்ட நகல் தற்போது ஜமுனாமரத்தூர் வட்டாச்சியர் அலுவலகத்தில் இருந்து பெற்று தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்ககூடியதல்ல என தனது எதிருரையில் தெரிவித்திருந்தாலும் அதனை தற்போது ஆவணமாக ஏற்றுக்கொண்டு அதன் உண்மை தன்மை குறித்து வாதுரையின்போது கூட முடிவு செய்ய இயலும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மேற்படி ஆவணம் தனது வழக்கை நிரூபணம் செய்ய முக்கியமும் அவசியமானதாகும் என்று மனுதாரர் தெரிவித்துள்ளதை கருத்திற்கொண்டும், அந்த ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டால்தான் இருதரப்பினர்களுக்கிடைய உள்ள பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண இயலும் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்ற நிலையில், இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே சட்டப்படியும் நியாயப்படியும் சரியானதாக இருக்கும் என இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, இம்மனுவை அனுமதித்து (Subject to proof and relevance of document filed ) உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S
SENTHILBABU

Digitally signed by S SENTHILBABU
Date: 2025.11.03 17:23:04 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**